# செய்தி மடல்

**NEWSLETTER - APRIL 2009**

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் Tamil Study Centre, Homebush Inc.
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au


## வருடாந்தப் பொதுக் கூட்டம்

எமது வருடாந்தப் பொதுக் கூட்டம் ஜனவரி மாதம் 31ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் அங்கத்தவர்கள் கலந்து கொண்டு புதிய நிர்வாகக் குழுவை தெரிவு செய்திருந்தார்கள். 2009ம் ஆண்டுக்கான நிர்வாகக்குழுத் தலைவராக திரு க லிங்கநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## அதிபர், HSC ஒருங்கிணைப்பாளர் நியமனம்

பெப்ரவரி மாதம் 14ம் திகதி நடைபெற்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் அதிபராக திரு தி திருநந்தகுமார் அவர்களும், HSC ஒருங்கிணைப்பாளராக திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

## உபஅதிபர்கள் நியமனம்

கல்விநிலைய உபஅதிபர்களாக திருமதி கனகேஸ்வரி வனதேவா, திருமதி மாலினி சோமாஸ்கந்தன், திருமதி ரதி குலராஜா அவர்கள் தெரிவு செய்யப்படடுள்ளார்கள்.

## 22வது நிறைவுக் கலை விழா

எமது 22வது நிறைவுக் கலை விழா மார்ச் மாதம் 28ம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இக்கலைவிழாவில் பாலர் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி தமிழ்மொழியில் அவர்களின் திறனையும், எமது கலை கலாசார பண்புகளையும் எடுத்துக்காட்டி அனைவரது பாராட்டையும் பெற்றார்கள்.

இக்கலைவிழாவின் வெற்றிக்கு பலவகைகளிலும் உதவிய பெற்றோர்கள், பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், வியாபார நிறுவனங்கள், தமிழ் அமைப்புக்கள் அனைவருக்கும் கல்வி நிலையம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

## மாணவர் சபை

இவ்வருடத்திற்கான மாணவர் சபைத் தலைவர்களாக பின்வரும் மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள். மேற்பிரிவின் தலைவர்களாக செல்வன் கலைச்செல்வன் ஜெயமனோகரும், செல்வி உமை புருஷோத்தமரும் இடம் பெறுகிறார்கள். மேலும் கீழ்பிரிவின் தலைவர்களாக செல்வன் மதுஷன் சங்கரதாசனும், செல்வி மிதுலா

## சிறந்த மாணவர்கள்

2008ம் ஆண்டுக்கான சிறந்த மாணவர்களாக 12 வயதிற்கு மேற்பட்டோர் பிரிவில் செல்வன் சிவாயன் சரவணபவானந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 12 வயதிற்கு கீழ்ப்பட்டோர் பிரிவில் சிறந்த மாணவராக செல்வன் கண்ணன் சுபபிரியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர்களுக்கு எமது கல்வி நிலையத்தின் பாராட்டுக்கள்.

## பாடற்குழு

எமது கல்வி நிலைய பாடல் குழுவிற்கு இவ்வாண்டிற்கான புதிய தலைவராக செல்வி அபிராமி லிங்கநாதன் தெரிவாகி உள்ளார். இக்குழுவிக்குப் பொறுப்பாசிரியராக திருமதி க வடிவேற்பிள்ளை இருப்பார். குழு மாணவர்கள் ஒழுங்காக பயிற்சியில் ஈடுபடுவதுடன், தமிழ் விழாக்களில் பாடுவதிலும் பங்கேற்பார்கள். இவ்வருடம் புதிதாக இணைய விரும்பும் மாணவர்கள் வகுப்பாசிரியர்களிடமோ அல்லது பொறுப்பாசிரியரிடமோ பெயர்களை பதிவுசெய்து இணைந்து கொள்ளலாம்.

## பேச்சுப்போட்டி - 2009

இவ்வருடம் பேச்சுப்போட்டி எதிர்வரும் மே மாதம் 9ம், 16ம் திகதிகளில் நடைபெற உள்ளது. இதற்கான குறிப்புகளை நீங்கள் கல்வி நிலைய இணையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்

## பட்டறை – HSC மாணவர்கள்

HSC மாணவர்களுக்கான பட்டறை ஒன்று மாணவர்களினது நலன் கருதி எதிர்வரும் 18ம் திததி ஏப்பிரல் மாதம் எமது கல்வி நிலையத்தில் காலை 9:00 மணி தொடக்கம் மாலை 3:00 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் மாணவர்கள் அனைவரையும் தவறாது பங்குகொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இப்பட்டறைக்குத் தேவையான சகல பொருட்களும், மதிய உணவும் மாணவர்களுக்கு வழங்கப்படும். அனுமதி இலவசம்.

## மாணவ உதவி ஆசிரியர்கள்

இவ்வருடம் எமது கல்விநிலையத்தில் உயர்தரவகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் உதவி ஆசிரியர்களாக கீழ்வகுப்பு ஆசிரியர்களுக்கு உதவிபுரிந்து வருகிறார்கள். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களை கவனிப்பதில் அதிகநேரம்

குமாரசாமியும் இடம் பெறுகிறார்கள். இவர்களுக்கு மேற்பிரிவின் பொறுப்பாசிரியராக திருமதி பு புருஷோத்தமரும், கீழ்ப்பிரிவின் பொறுப்பாசிரியராக திருமதி செ ஜெயமனோகரும் இருப்பார்கள்.

**<u>பாடசாலைக் கட்டணம்</u>**

தமிழ்க் கல்வி நிலையத்தின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தரும் பணத்தை விட அதிகமாகத் தேவைப் படுவதால், பெற்றோர்களாகிய நீங்கள் தயவு செய்து பாடசாலைக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்துமாறு மிகவும் பணிவன்புடன் நிர்வாகக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

**<u>ஞாயிறு தமிழ்ப் பாடசாலை</u>**

பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், பாடசாலைப் படிப்பை முடித்தவர்களுக்கும், மற்றும் வளர்ந்தவர்களுக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை தமிழ்ப்பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் இளைஞர்கள் தமிழை கற்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது. எடுப்பதுடன், படிப்பித்தல் தரமும் மேலும் உயர்ந்துள்ளது எனலாம்.

**இரண்டாம் தவணை ஆரம்பம் - 02.05.2009**

**<u>முக்கிய தினங்கள்</u>**

02.05.09 – இரண்டாம் தவணை ஆரம்பம்
09.05.09 – பேச்சுப்போட்டி (6 – 11 வகுப்பு)
16.05.09 – பேச்சுப்போட்டி (பாலர் - 5 வகுப்பு)
30.05.09 – எழுத்துப் பரீட்சை
13.06.09 – வாசித்தல் பரீட்சை
27.06.09 – அரையாண்டுப் பரீட்சை
11.07.09 – பேச்சுப் போட்டி பரிசளிப்பு தினம்
11.07.09 – பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு
11.07.09 – 2ம் தவணை நிறைவு நாள்